# மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்
## கண்டி
## அலகுப் பரீட்சை 2020

**பாடம் :- இந்து நாகரீகம்** **நேரம் : 1.30 மணி**

## பகுதி I
### வேதாந்தம் - சங்கரர்

01. வைதீக தத்துவங்கள் எனப்படுகின்றவை
1. வேதங்களைப் பிரமாணமாக ஏற்றுக் கொண்டவை
2. அவைதீக சமயங்களை பிரமாணமாக கொள்பவை
3. வேதங்களைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளாதவை
4. வேத ஆகமங்களை மறுத்து கூறுபவை

02. வேதாந்த கோட்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாக அமைந்தவை
1. சங்கிதைகள், பிராமணங்கள் 2. ஆரணியங்கள், உபநிடதங்கள்
3. உபநிடதங்கள், பிரமசூத்திரம் 4. தர்மசாஸ்திரங்கள், வேதங்கள்

03. சங்கரர் பிரம சூத்திரத்துக்கு எழுதிய விளக்க உரை
1. மத்வபாஷ்யம் 2. ஶ்ரீபாஸ்யம் 3. ஆரியாசதகம் 4. மகாபாஷ்யம்

04. அத்வைதம் என்ற சொல்லுக்கு
1. இரு வகையில் பொருள் கொள்வர்
2. ஆறு வகையில் பொருள் கொள்வர்
3. மூன்று வகையில் கொள்வர்
4. 5 வகையில் பொருள் கொள்வர்

05. இன்மைப் பொருள் கொண்டு பிரமம் ஒன்றே உண்மைப் பொருள் என நிறுவுவோர்
1. சுத்தாத்துவித வாதிகள் 2. கேவலாத்து வித வாதிகள்
3. பரிணாம வாதிகள் 4. அநாத்ம வாதிகள்

06. சங்கரர் கயிறு – பாம்பு என்ற உதாரணத்தின் மூலம் பிரமம் உண்மை என நிருபிக்க மேற்கொண்ட வாதம்
1. பரிணாமவாதம் 2. ஏகான்மவாதம் 3. விவர்த்த வாதம் 4. சற்காரியவாதம்

07. ஜீவன் முத்தி எனப்படுவது
1. இந்த உடலோடு இருக்கும்போதே பெறப்படுவது
2. இந்த உடலை விட்டு சீவன் நீங்கிய பின் பெறப்படுவது
3. பிரமச்சரிய நிலையில் பெறப்படுவது
4. அந்தியேட்டி கிரியை நிகழ்ந்த பின் கிட்டுவது

08. பிரமசூத்திரத்தின் ஆசிரியர்
1. சங்கரர் 2. மத்துவர் 3. நீலகண்ட சிவாசாரியார் 4. பாரதராயணர்

09. தாய்க்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கச் செய்த சமயப்பெரியார்
1. இராமானுஜர் 2. கபீர்தாசர் 3. மத்துவர் 4. சங்கரர்

10. சங்கரர் கூறும் மாயையை வார்த்தையால் குறிக்க முடியாது என்பதை குறிப்பது.
1. விவர்த்த வாதம் 2. பிரதிவிம்ப வாதம் 3. அநிர்வசனியம் 4. விட்ஷேபம்

11. அறுவகை தரிசனங்களில் ஒன்று

1. உபநிடதம் 2. மீமாம்சை 3. பௌத்தம் 4. சித்தாந்தம்

12. கீழ்வரும் கூற்றுக்களை வாசித்து விடை தருக.

A. மகாபாடியம் என்னும் உரை நூலின் ஆசிரியர்

B. மீளாநகர கொள்கையை முன்வைத்தவர்

C. விவர்த்தவாதத்தை முன் வைத்தவர்

சங்கரர் வேதாந்தத்துடன் தொடர்புடைய தொகுதி

1. A யும் C யும் 2. A யும், B யும் 3. B யும், C யும் 4. A யும், D யும்

13. மாண்டுக்கிய காரிகையின் ஆசிரியர்

1. கோவிந்த பாதர் 2. கௌடபாதர் 3. நரசிம்ம பாதர் 4. சிவபாதர்

14. அத்வைதம் பற்றி கூறும் நூல்

1. வேதாந்த சங்கிரகம், மாண்டுக்கியகாரியை 2. ஸ்ரீபாஷியம், பிரமசூத்திரம்

3. மாண்டுக்கிய காரினை, பிரம சூத்திரம் 4. பகவத்கீதை, பிரம சூத்திரம்

15. ஸ்ரீகண்ட சிவாசசாரியார் பிரம சூத்திரத்திற்கு எழுதிய உரை

1. கீதாபாஷியம் 2. ஸ்ரீகண்டபாஷியம் 3. மகாபாஷியம் 4. ஸ்ரீகண்ட பாஷியம்

16. பிரஸ்தான திரயங்கள் எனப்படுபவை

1. வேதம், ஆகமம், புராணம்

2. பிரசூத்திரம், ஸ்மிருதி, இதிகாசம்

3. வேதாந்த சூத்திரம், மகாபாரதம், இராமாயணம்

4. உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை

17. சங்கரர் எழுதிய நூல்களின் தொகுதி

1. சிவானந்தலகரி, கணேச பஞ்ஞாத்திரம், பஜகோவிந்தம்

2. வேதாந்த பாஷியம், கீதாபாஷியம், ஸ்ரீபாஷியம்

3. வேதாந்த சங்கிரகம், கணேச பஞ்ஞாத்திரம், ஆரியாசதகம்

4. மத்துவர் பாஷியம், மாண்டுக்கிய காரிகை, வேதாந்த சாரம்

18. அத்வைதக் கோட்பாட்டின் திறவு கோலாக அமையப்பெற்ற நூல்

1. உபநிடதம் 2. மாண்டுக்கிய காரிகை 3. பகவத்கீதை 4. வேதம்

19. வேதாந்திகள் தம்முள் வேறுபட்டமைக்கான காரணம்

1. அவர்கள் வாழ்ந்த காலம் 2. முத்திக் கொள்கை

3. பிரமசூத்திரத்திற்கு கொடுத்த விளக்கம் 4. அவர்களது குருமார்

20. சங்கரருடைய குருவாகவும், மூல குருவாகவும் விளங்கியவர்கள்

1. கோவிந்த பாதர், கௌடபாதர் 2. மருணீக்கியார், வியாசகர்

3. மெய்கண்டார், நாதமுனிவர் 4. வேதாந்த தேசிகர், கோவிந்த பாதர்

# மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி
# அலகுப் பரீட்சை 2020

**பாடம் :- இந்து நாகரீகம்**

## பகுதி II

❖ **எவையேனும் 3 வினாக்களுக்கு விடை தருக.**

01. வேதாந்த தத்துவ சிந்தனை வளர்ச்சியில் சங்கரரது அத்வைதம் ஒரு தத்துவக் கோட்பாடாக உருவாகியதை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
    (அ) பிரமாண நூல்கள்
    (ஆ) பிரமம், ஆன்மா
    (இ) உலகம் பற்றிய கோட்பாடு
    (ஈ) முத்தி, முத்திக்கான வழிகள்

    (4+7+5+4=20 புள்ளிகள்)

02. “இந்து சமய தத்துவ மரபிற் சங்கரரது வேதாந்தம் தனித்துவம் மிக்கது” மேல்வரும் லிடயங்களின் அடிப்படையில் இக்கூற்றினைப் பரிசீலிக்குக.
    (அ) சங்கரரது காலம்
    (ஆ) அவரது தத்துவக் கோட்பாட்டின் பிரதான அம்சங்கள்
    (இ) வேதாந்தமும் சமய வாழ்வும்

    (3+10+7=20 புள்ளிகள்)

03. “மத்திய காலத்தில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஆதி சங்கரர் காரணமாயிருத்தார்” இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    (அ) வைதீக சமய சிந்தனைகளை விருத்தி செய்வதிலும் தெளிவுப்படுத்துவதிலும் சங்கரர் கொண்டிருந்த பங்கு எத்தகையது.
    (ஆ) இந்து சமய சீர்திருத்தம், இந்து சமய மறுமலர்ச்சி என்பன தொடர்பாகச் சங்கரர் ஏற்படுத்திய சாதனைகளைப் பரிசீலனை செய்க.
    (இ) அத்வைதத்தின் அடிப்படைக் கொள்கை.

    (6+6+8=20 புள்ளிகள்)

04. இந்து சமயத்தை மேன்மை பெறச் செய்வதற்கு ஆதிசங்கரர் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.
    (அ) சமய சீர்திருத்தம்
    (ஆ) உரை நூல்கள்
    (இ) தத்துவ சிந்தனை
    (ஈ) மடாலயங்கள்

05. சங்கரர் வேதாதத்திற்கும் இராமானுஜர் வேதாந்தத்திற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிடுக.